# குறள் நெறி


குறள்நெறி ஓங்கின் குடியரசு ஓங்கும்

நிறுவுநர்: செந்தமிழ்மாமணி சி.இலக்குவனார்

மின்னிதழ் 9 | வைகாசி 02, தி.பி 2052 | மே 16, கி.பி 2021



சிறப்பாசிரியர் குழு

முனைவர் பொற்கோ
(முன்னைத் துணைவேந்தர், சென்னைப்பல்கலைக்கழகம்)

முனைவர் இ.சுந்தரமூர்த்தி
(முன்னைத் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம்)

முனைவர் இர.பிரபாகரன்
(மேரிலாந்து,அமெரிக்கா)

முனைவர் அன்புசெயா
(சிட்னி,ஆத்திரேலியா)

பாவலர் முரசு நெடுமாறன்
(மலேசியா)

பேராசிரியர் மன்னர்மன்னன்
(மலேசியா)

பேராசிரியர் பெஞ்சமின் லெபோ
(பிரான்சு)

கவிஞர் அழ.பகீரதன்
(இலங்கை)

பொறியாளர் ச.இராசகுமாரன்
(அயர்லாந்து)

திரு.எலியாசு
(சிங்கப்பூர்)

திருமதி.மதிவதனி பத்மநாதன்
(சுவிட்சர்லாந்து)

திருமதி.தாமரை சீனிவாசராவ்
(கம்போடியா)

திரு.ஞானமுருகன்
(இங்கிலாந்து)

முனைவர் இராம சுந்தரம்
(கொரியா)




## “முப்பால் ஒளி“ பரப்பிய அப்பாத்துரையார்

உள்ளே)


*இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு* *விற்பனைக்கு அல்ல.*

# கொரோனா துயர்துடைப்புப் பணிகளில் அரசுக்கு ஒத்துழைப்போம். முதலமைச்சரின் பொதுத் துயர்துடைப்பு நிதிக்கு அள்ளி வழங்குவோம்.




உயிர்களைக் கவர்ந்திடும்
பெருந்தொற்று ஒருபுறம்;
வயிற்றுப் பிழைப்புக்கே
வழியற்றோர் ஒருபுறம்;
கொரானாச் சூழலால்
வேலை இழந்தே
செய்வதறியாக்
குடும்பங்கள் மறுபுறம்;
நெசவும் உழவும்
தொழிலாய்க் கொண்டோர்,
சிறுகுறு தொழிலோர்,
மாணவர், அலுவலர்,
பலப்பல நிலையினர்
படுகின்ற பெருந்துயர்
அடுக்கி வருகின்ற
அனைத்தும் வழங்கும்
அறைகூவல்களை
எதிர்கொளும் வகையில்
பொறுப்பேற்கின்றார்;
வரிமணல் ஞெமிரக்
கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத்
துறையுமுண்டோ?
கலைஞர் பெற்ற
அரிமாக் குருளைக்குத்
தடைக்கற்களெல்லாம்
படிக்கற்களன்றோ?
பெரும! நின்
பெரும்பணி சிறக்க!
வையகம் போற்ற
வாகை சூடுக!

# திருக்குறளில் தெளிவு

## முனைவர் மு. முத்துவேலு



*முனைவர் மு.முத்துவேலு ஆட்சிமொழிக்குழு ஆணைய உறுப்பினராக விளங்கி ஆட்சித்தமிழ்ச் சொற்கோவை வளர்ச்சியுறப் பணியாற்றி வருகிறார்.கூட்டுறவுத் தணிக்கைத் துறையில் ஒன்பதுஆண்டுகளும் தலைமைச் செயலகத்தில் மொழிபெயர்ப்புப் பிரிவில் ஐந்து ஆண்டுகளும் பணியாற்றியபின் கல்லூரிக்கல்வித் துறையில் அரசினர் கல்லூரிகளில் இருபத்துமூன்று ஆண்டுகள் பேராசிரியப் பணியாற்றியுள்ளார்.மத்தியச் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தில் ஐந்து ஆண்டுகள் பதிவாளராகப் பணியாற்றி அதன் வளர்ச்சிக்கு வலிமையான அடித்தளம் அமைதற்குத் தம் பங்களிப்பை வழங்கியுள்ளார்*

திருக்குறளின் சிறப்பினைப் பற்றிப் பாடும்போது பாரதியார், 'குறளின் உறுதியும் தெளிவும், பொருளின் ஆழமும் விரிவும் அழகும்' என்று குறிப்பிகிறார். இவ்வைந்தினுள் குறளின் உறுதி பற்றிய கட்டுரை சென்ற இதழில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து இந்த இதழில் 'குறளின் தெளிவு' பற்றிய செய்திகளைக் காண முற்பட்டுள்ளேன்.

கவிதையில் ஒரு கருத்தத் தெளிவாக எடுத்துரைப்பதற்கு இடைச் சொற்கள் பயன்பட்டுள்ளன. இதனைத் தொல்காப்பியம் 'ஏ' காரம் என்னும் இடைச் சொல் பற்றிப் பேசுகையில்,

'தேற்றம் வினாவே பிரிநிலை எண்ணே
ஈற்றசை இவ் ஐந்து ஏகாரம்மே' (தொல். 742)

என்று குறிப்பிடுகிறது.

ஏகாரம், திருக்குறளில் இந்த ஐந்து பொருள்களிலும் பயன்பட்டுள்ளது. இவற்றுள் தேற்றமும், பிரிநிலையும் பொருளைத் தெளிவாக உணர்த்தப் பயன்பட்டுள்ள தன்மை இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

'தேற்றம்' என்னும் சொல் சிறப்பாக உணர்த்தும் பொருள், 'தெளிவு' என்பதாகும். ஏகாரம் தேற்றம் என்ற பொருளில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் அமைந்துள்ளது. சிறப்பாகக் குறிப்பிடுகையில் திருக்குறளின் முதற்பாவினில் வள்ளுவர் தம் கருத்தைத் தெளிவாக உரைப்பதற்காக ஏகாரத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு.* (குறள். 1)

இக்குறளில் முதற்று (ஏ) என்றில் வரும் 'ஏ' காரம் எழுத்தின் தெளிவை அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கின்றது.இதைப்போலவே, உழவன் சிறப்பை உணர்த்த வந்த வள்ளுவர் அக்கருத்தைத் தெளிவாக நம் உள்ளத்தில் பதிய வைக்க,

*சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.* (குறள். 1031)

இங்கு உழவுடன் 'ஏ'காரத்தை இணைத்துள்ளார். இங்கு கருத்தின் தெளிவு ஆழமாக அமைந்துள்ளது.

‘தவம்’ பற்றிப் பொருள் விளக்கம் கூறும்போது அதன் தெளிவு கருதி, வள்ளுவர்

*உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை*
*அற்றே தவத்திற்கு உரு.* (குறள். 261)

என்று ‘ஏ’ காரத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

இவற்றை உற்று நோக்கும்போது இக்குறட்பாக்கள் கருத்தின் தெளிவினை அழுத்தமாகவும் ஐயமின்றியும் வெளிப்படுத்தியுள்ளன என்பது தெளிவாகிறது.

இரண்டாவதாக, ஒரு பொருளைப் பற்றி இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றபோது, அவை இரண்டையும் சுட்டிக் காட்டி அவற்றுள் எது தனக்கு உடன்பாடோ அதனைத் தெளிவாக வெளிப்படுத்துவதற்கு வள்ளுவர் ‘ஏ’ காரத்தை பிரிநிலை என்னும் பொருளில் பயன்படுத்தியுள்ளார். இருவேறு கருத்துக்களையும் பிரித்துக் காட்டி சரியான ஒன்றை நிலைப்படுத்துவதற்கு வள்ளுவர் ஏகாரத்தை கையாண்டுள்ள திறத்தையும் காணமுடிகிறது.

உலகத்து வாழ்வியல் நெறிகளில் இல்லறம் துறவறம் என்ற இரு நிலைகள் உள்ளன. இவற்றுள் எது இயற்கை வாழ்வுக்கு ஏற்றது என்பதைத் திருவள்ளுவர் தெளிவுபடுத்தக் கருத்தும் இடத்தில்,

*அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.* (குறள். 49)

என்று, அறம் இயற்ற வேண்டும் என்னும் நோக்கில் வாழ்வைத் தொடங்கும் ஒவ்வொருவருக்கும் இல்வாழ்க்கையே உரியது. துறவறம் பழிச் சொல்லுக்கு உள்ளாகாதிருக்குமாயின் நன்று என்று காட்டுகிறார்.

மகளிருக்குப் பாதுகாப்புச் சிறையா அல்லது அவர்தம் நிறையா என்ற வினா எழுமாயின் அங்கே மகளிரின் நிறைதரும் காப்பே சிறையினும் சிறந்தது என்பதைச் சுட்டவும் தெளிவுபடுத்தவும் ஏகாரம் எடுத்தாளப்பட்டுள்ளது.

*சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும் மகளிர்*
*நிறைகாக்கும் காப்பே தலை.* (குறள். 57)

என்ற குறட்பாவில் காணும் கருத்துத் தெளிவைக் காணுங்கள்!

நல்லாரிடத்து அமைந்த வறுமை; கல்லாரிடத்து சேர்ந்த செல்வம்; இவ்விரண்டில் எது அதிகமான தீமை செய்யும் என்று இரண்டையும் ஒப்பிட்டு இதன் மீதான தெளிவான முடிவைக் கூறும்போதும் வள்ளுவர் ‘ஏ’காரத்தைப் பயன்படுத்தியுள்ளார்.

*நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே*
*கல்லார்கண் பட்ட திரு.* (குறள். 408)

என்பது குறள்.

எது ஈகை என்ற வினாவைத் தனக்குள் எழுப்பி அதற்கு விடைதரும் வகையில் கருத்தினைத் தெளிவாகப் புலப்படுத்திட ஏகாரம் எடுத்தாளப்பட்டுள்ளது.

*வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்*
*குறிஎதிர்ப்பை நீரது உடைத்து.* (குறள். 221)

என்று வறியவர்களுக்கு வழங்குவதுதான் ஈகை மற்றவை மறுபயன் கருதி வழங்குவதாகவே அமையும் என்று விளக்கிக் காட்டுகிறார்.

வாழ்வில் பழிநீங்க வாழ வேண்டுமா அல்லது புகழ் அழிய வாழ்தல் சிறப்பாகுமா என்ற மயக்கத்தை நீக்கித் தெளிவாக்க வேண்டும் என்ற இடத்தில்,

*வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசைஒழிய*
*வாழ்வாரே வாழா தவர்.* (குறள். 240)

என்ற குறட்பாவின் வழி வள்ளுவர் தெளிவென்னும் தெள்ளிய பண்பைப் புலப்படுத்தியுள்ளார்.

மூன்றாவதாக, ஓர் அதிகாரத்தின் முதற் குறட்பாவில் அந்த அதிகாரத்தின் பொருளைத் தெளிவாக உணர்த்தித் தொடங்க வேண்டும் என்ற கருத்தில் அந்த அதிகாரத்தின் பெயர் மீது வினாவை எழுப்பி அதற்கு விடையையும் அமைத்துள்ளார். அத்தகு வினாவை எழுப்புவதற்கு வள்ளுவர் 'யாதெனின்' என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

வாய்மை என்பதன் இலக்கணம் என்ன? எது வாய்மை? அது பொய்மைக்கு எதிரானதா? அல்லது பொல்லாங்கு பேசாமையா எனப் பலப்பல வினாக்கள் நம் மனத்தில் தோன்றும் நிலையில், அதிகாரத்தின் முதற் பாட்டிலேயே வினாவை எழுப்பி விடைத்தருகிறார்.

*வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்.* (குறள். 291)

என்று, வாய்மை என்பது எந்த உயிர்க்கும் சிறிதும் தீமை பயவாத சொற்களைச் சொல்லுதல் என்ற கருத்தைத் தெளிவாக்கியுள்ளார்.

கொல்லாமை அதிகாரத்தின் பொருளைத் தெளிவாக எடுத்துரைக்கும் நோக்கில், அதனைப் பொருள் வரையறை செய்கிறார். கொல்லாமையே அறத்தின் தலைமை, கொல்லுதல் பிற தீமைகள் அனைத்தையும் செய்வதற்கு ஒப்பாகும் என்னும் கருத்தை ஒரு வினாவை எழுப்பி விளக்கி இருக்கிறார். இங்கு கருத்தின் புலப்பாட்டிற்கு வினாவின் பயன்பாடும் அது பொருள் தெளிவிற்குத் துணையாகும் தன்மையும்,

*அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்*
*பிறவினை எல்லாம் தரும்* (குறள். 321)

என்னும் இந்தக் குறளில் வெளிப்படக் காண்கிறோம்.

திருவள்ளுவர் பொருள் தெளிவிற்காக, பழைமை என்னும் அதிகாரத்தைப் பற்றி அறிமுகம் செய்கிறபோதும், இந்த வினா உத்தியைக் கையாண்டுள்ளார்.

*பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.* (குறள். 801)

என்று, உரிமையில் செய்யப்படும் செயல்களை அழித்திடாத செயல் எதுவோ அது தான் கிழமை என்னும் நட்பிற்குற்ற தொடர்பிற்கு இலக்கணம் கூறுகிறார்.

வினாவை ஓர் இலக்கிய உத்தியாகப் பயன்படுத்தி இருப்பது தனித்தநிலை ஆய்வுக்குரியதாகும். காட்டுக்காகச் சிலவற்றை மட்டுமே இங்கு சுட்டினேன்.அடுத்ததாக, ஒரு பொருளைப் பற்றித் தெளிவாக விளக்குகையில் அதன் உட்கூறுகளை இரண்டு, மூன்று, நான்கு என்று எடுத்துரைப்பதும் ஓர் உத்தியாக அமைகின்றது. அந்த வகையில் திருவள்ளுவர் தெளிவு கருதி அமைத்திருக்கும் குறட்பாக்களைச் சுட்டுவது இங்கு பொருத்தமாக அமைகிறது.

கல்வி என்னும் கருத்துக்குள் எவையெவை அடக்கும் என்பதைச் சுட்டும்போது,

*எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்என்ப வாழும் உயிர்க்கு.* (குறள். 392)

என்று எண்ணும் எழுத்துமான இவ்விரண்டுந்தான் கல்வியாகும் என்னும் கருத்திற்கு ஒளியூட்டுகிறார். இக்கருத்துதான் இன்றும் நிலவுகிறது.

திருவள்ளுவர் காலத்தில் எண் என்பது இலக்கணத்தையும் எழுத்து என்பது இலக்கியத்தையும் குறித்திருக்கக் கூடும். அல்லது, காலத்தில் இலக்கியம் படைப்போரைக் 'கணக்காயர்' என்று அழைத்த வழக்கு இருந்தது என்பதால், எண் என்பது இலக்கியத்தைக் குறிப்பதற்கு, இது மற்றொரு வகையிலும் பொருந்தும். இலக்கியங்களை நாம் பதினெண் மேற்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்று தொகுத்த காரணத்தினால் எண் என்பது இலக்கியத்தைக் குறிப்பது என்பதும் பொருத்தமாகும். மேலும் இலக்கியம் தோன்றிய பிறகே இலக்கணம் தோன்றிற்று என்பதால் எண் என்பது இலக்கியத்தைக் குறிக்கும் சொல்லாதல் கூடும் என்றாலும் பொருந்தும். மேலும் 'எழுத்தெனப் படுப' என்று நம் முதல் இலக்கண நூல்

தொல்காப்பியம் தொடங்குவதால் ‘எழுத்து’ என்னும் சொல் இலக்கணத்தைக் குறிப்பதாகச் சொல்லாம். எழுத்து என்பது மொழியைப் பற்றிய ஆய்வின் தொடக்கம் என்பதும் இங்கு நினைக்கத் தக்கதாகும்.

இந்த எண்ணும் எழுத்தும் இன்று கல்வி என்னும் பொருள் உள்ளடக்கும் அறிவியலையும் கலையையும் சொல்லாகக் கொள்வதற்கும் இடமளிக்கின்றன. எண் என்பது கணிதம், கணிதம் அறிவியலின் பேரரசி. எனவே, எண் அறிவியலின் குறியீடு. எழுத்து என்பது கலை இலக்கியம் வரலாறு முதலியவற்றின் உள்ளடக்கம். எனவே இன்று ‘கலை அறிவியல் கல்லூரிகள்’ என்ற பெயர்ப்பலகையில் விளங்கும் கல்வி நிலையங்கள் சுட்டும் ‘கல்வி’ என்பதை வள்ளுவர் மிகவும் தெளிவாக உணர்த்துவதற்குத் தரும் எண்ணும் எழுத்தும் என்னும் வகைப்பாடு உளங்கொண்டு மகிழத் தக்கதாகும்.

நிலமாளும் மன்னனுக்கு நீங்காமல் இருக்க வேண்டிய பண்புகள் எவையெவை என்று பட்டியலிட்டு விளக்கும் வள்ளுவர்,

*தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
*நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.* (குறள். 383)

என்று காலந்தாழ்த்தாமை, கல்வியறிவு, துணிவுடைமை ஆகிய மூன்றும் பண்பு நலன்களையும் சுட்டுகிறார். இவ்வாறு அரசனின் அரும்பண்புகளை அடுக்கிக்கூறுகையில் இரண்டு, மூன்று என்று எண்ணிக்கை அமைத்துக் கூறுவது வள்ளுவர் கூற வந்த கருத்தைச் சிதையாமல் உரைப்பதற்கான உத்தியாக அமைத்துள்ளார்.

பிறனில் விழைவோன் பல்வேறு கேடுகளுக்கு இடமளிப்பான்; அவனிடத்தே நீங்காத தீமைகள் நிறைந்திருக்கும், பிறன்மனை நோக்காத பேராண்மை இல்லாதவனிடம் எந்த அறநெறியும் சென்று தங்காது என்று கூறும் இடத்து,

*பகைபாவம் அச்சம் பழியென நான்கும்*
*இகவாவாம் இல்இறப்பான் கண்.* (குறள். 146)

என்று பிறன் மனையை நயப்பவன் இயல்பாகவே பகையைத் தேடிக் கொள்வான்; பாவங்கள் தானே அவனிடம் வந்து தங்கும் அச்சமே மேலிடும் அவலம் அவன் வாழ்வில் இருளெனச் சூழும். பழியனைத்தும் அவன் வழிதேடி வந்தடையும் என்கிற கருத்தைத் தெளிவுபடுத்த ‘நான்கு’ என்னும் எண்களைப் பயன்படுத்தியுள்ளார்.

அமைச்சரின் இலக்கணத்தை வகுக்க வந்த வள்ளுவர் அமைச்சர்களுக்கு இருக்க வேண்டிய இன்றியாமையா இயல்களைப் பட்டியலிடுகிறார். இங்கேயும் எண்களிட்டுக் காட்டுகிறார்.

*வன்கண் குடிகாத்தல் கற்றுஅறிதல் ஆள்வினையோடு*
*ஐந்துடன் மாண்டது அமைச்சு.* (குறள். 632)

உள்ள உறுதிப்பாடு, குடிகளைக் காக்கும் பண்பு, கல்வி, அறிவுடைமை, அசையா ஊக்கம் இவை ஐந்தும் அரசனுக்கு அமைய வேண்டியவை என்று ஓர் எண்வழியே எடுத்துரைப்பது, நாம் இக்கருத்தைத் தெளிவாக நினைவில் கொள்ள வழிவகுக்கிறது.

திருக்குறளின் மங்காப் புகழுக்கும் மாறாத உயிர்ப்புக்கும் காரணிகளாக இருப்பவை அது, அறக்கருத்துக்களை எடுத்துரைப்பதில் கொண்டுள்ள எளிமையும் தெளிவுமே ஆகும். அந்தத் தெளிவைக் கொணர வள்ளுவர் கையாண்டுள்ள வழிமுறைகளில் ஒரு சில மட்டும் காட்டப்பட்டன.

ஐயமும் மயக்கமும் அறுத்து அரிய கருத்துக்களையும் எளிமையாய் எடுத்துரைக்கும் ஆற்றலில் திருக்குறள் பிற அறநூல்களினும் முந்தி நிற்கிறது. கருத்துத் தெளிவைக் கற்போர் உள்ளத்தில் ஐயமின்றிப் பதிக்கும் திறன் வள்ளுவப் பெருந்தகைக்கு வாய்த்த பெருங்கலை என்பதை நிறுவுதற்கு இக்கட்டுரை முன் நிற்கும் என்பது என் நம்பிக்கை.

# குறள் போற்றும் பட்டி மன்றம்-6.

## “உள்ளேன் ஐயா”! உள்ளூர்க் கருப்பையா



- பேராசிரியர் கண.சிற்சபேசன்

நாங்கள் ஆண்டுதோறும் சென்று பட்டிமன்ற நிகழ்ச்சி நடாத்தும் ஊர் அது. அருப்புக்கோட்டை. அங்கெல்லாம் எங்கள் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்பவர் சுந்தரபாண்டியம் என்ற ஊரில் தமிழாசிரியராகப் பணியாற்றிய கொன்றையாண்டி என்ற அரிய நண்பர். நாங்கள் போய் இறங்கியது முதல் அரச வரவேற்புதான். நல்ல மனிதர். அந்த ஆண்டு பட்டிமன்றத்தலைப்பு ‘அரக்கன் தம்பியருள் அறவழி நின்றவன் கும்பகருணனா? வீடணனா?” என்பது. பொதுவாக இதுபோன்ற தலைப்புகளை நான் கொடுத்த பின் பேராசிரியர் சி.இலக்குவனார் ஐயாவிடம் சொல்வேன். நேராகத் திருக்குறளைப் பற்றிய தலைப்பாக இல்லாமல் கம்பரின் இராம காதையில் உள்ள தலைப்பாக உள்ளதே? ஐயா என்ன சொல்வாரோ என்று எனக்குள் ஒரு உதறல். ஆனால் ”அருமையான தலைப்பு சித்சபை! திருக்குறளின் அடுத்தடுத்த அதிகாரங்களைப் படம் பிடித்துக் காட்டுபவர்கள் இருவரும். ஒருவன் ‘செய்ந்நன்றியறிதல்’ என்ற பண்பின் வடிவம் மற்றொருவன் ‘நடுவுநிலைமை’ என்றஅதிகாரத்திற்கு எடுத்துக்காட்டு” என்று பாராட்டிச் சொன்னார்.

பிறகென்ன எனக்குக் கொண்டாட்டம்தான். வழக்கம்போல கும்பகர்ணன் அணியின் தலைவர் சாலமன் பாப்பையா. வீடணன் அணிக்குப் பேராசிரியர் கவிஞர் கதி.சுந்தரம்.

நாங்கள் மூவரும் என்னுடைய மகிழுந்தில் போனோம். அங்கெல்லாம் நான் முன் குறிப்பிட்டிருந்தது போல இரவு 9 மணிக்கு மேல்தான் எங்கள் நிகழ்ச்சிகள் தொடங்கும். எல்லோரும் கடைகளை மூடிவிட்டு வீடுகளுக்குச் சென்று இரவு உணவு முடித்துக்கொண்டு வந்து அமர்ந்து அமைதியாகக் கேட்பார்கள்.

அருப்புக்கோட்டை பரோட்டா- குருமாவுக்குப் பெயர் பெற்றது. எங்கள் மூவரையும் ஒரு புகழ்பெற்ற கடைக்கு அழைத்துப் போனார் கொன்றையாண்டி. நாங்கள் உண்ண அமர்ந்தவுடன் கடைப் பையன் ஆளுக்கு இரண்டு இரண்டு பரோட்டா கொண்டு வந்து இலைகளில் போடப்போனான். பின்னால் உண்டு கொண்டிருந்த குண்டான ஒரு நபர் “டேய் நில்லுடா, இருடா நான் வாரேன்” என்று சொல்லிக்கொண்டே தான் உண்டதைப் பாதியில் நிறுத்திவிட்டு எழுந்தோடி வந்து கையைக் கழுவினார். 10 பரோட்டாக்களை மீண்டும் சூடேற்றினார். குருமாவைக் கொதிக்க வைத்தார். நாங்கள் உண்ணும் வரை பக்கத்திலிருந்து பார்த்துப் பார்த்துப் பரிமாறினார். ”ஐயா! இதைத்தான் சங்க கால மன்னர்கள் புலவர்கள் !அருகிருந்து ஊட்டுதல்”என்று சங்க இலக்கியம் கூறுகின்றது” என்று சொல்லுவீங்கள்ள ஐயா? என்று பாப்பையா பாராட்டினார். ஒரே மகிழ்ச்சி. நாங்கள் உண்டுமுடித்துக் கைகழுவித் திரும்பும் போது அந்தக்கடை ஊழியர் கருப்பையா என்னிடம் தலையைச் சொறிந்தவாறு கேட்டார் “ஐயா போனதும் ஆரம்பிச்சிருவீங்களா பட்டிமன்றத்தை” என்று. நான் கேட்டேன் “ஏன்”? அதற்கவர் சொன்னார் ஐயா பத்துப் பதினைந்து பாத்திரம் கிடக்குதுங்க ஐயா. விளக்கிப் போட்டுட்டு வரணும்” என்று நெளிந்தார். எனக்கு முந்திக்கொண்டு கவிஞர் கதி.சுந்தரம் ஐயா சொன்னார் “ஐயா கருப்பையா! நீ வருவதற்கு முன் இவரு பட்டிமன்றத்தை ஆரம்பிக்காமல் பார்த்துக்க வேண்டியது எங்க இரண்டுபேரு பொறுப்பு. நீ மெல்ல தைரியாமப் பாத்திரங்களை விளக்கிவிட்டு வா”.

நாங்கள் போய் மேடை ஏற்பாடுகள் எல்லாம் முடிந்த பிறகு மேடை ஏறினோம். திறந்தவெளி அரங்கு. அருமையான காற்று வீசியது. புலவர் கொன்றையாண்டியின் மாணவி ஒருத்தி கடவுள் வாழ்த்துப் பாடல் பாடினாள். ‘மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே” என்ற வள்ளற்பெருமானது பாடல். எல்லோரையும் தென்றலாய் வருடியது அடுத்து வரவேற்புரையைப் புலவர் கொன்றையாண்டி சொன்னார். எங்கள் எல்லோருக்கும் அருமையான கதர்த்துண்டு அணிவித்தனர். அருமையாக நிகழ்ச்சி தொடங்கியது. மிக மகிழ்ச்சியாக நான் நிகழ்ச்சியைத் தொடங்கினேன். அப்போது என் காதருகே வந்து பாப்பையா “ஐயா, பரோட்டாக்கடை கருப்பையா”? என்று நினைவு படுத்தினார். நான் மறந்து விட்டிருந்த பரோட்டாக்கடை கருப்பையாவிற்கு நாங்கள் கொடுத்திருந்த வாக்குறுதி அப்போது நினைவு வரவே என் முன் இருந்த கூட்டத்தில் கண்ணால் தேடினேன். அப்போது தூரத்தில் கூட்டத்தின் முன் பகுதியில் அமர்ந்திருந்த அந்தக் கரிய உருவம் தன் தலையில் கட்டியிருந்த முண்டாசை அவிழ்த்தபடி “ஐயா! பரோட்டாக்கடை கருப்பையா வந்துட்டேன்” என்று கூவியது. கூட்டத்தினர்க்கு ஒரே வியப்பு. அப்போது நான் சொன்னேன் “நீங்கள் யாரும் இது என்னவென்று விழிக்கவேண்டாம் எனக்கும் உங்களூர் பரோட்டாக் கடை கருப்பையாவிற்கும் ஓர் ஒப்பந்தம். அதன்படி அவர் தனது கடையிலுள்ள பாத்திரங்களை விளக்கிமுடித்து விட்டு வருகிறவரை நான் எனது இந்த இலக்கியப் பாத்திரங்களை விளக்குவதில்லை” என்று சொன்னேன். அதற்குள் கருப்பையாவிற்கு யாரோ சொல்லிக் கொடுத்துள்ளார்கள். அவர் மீண்டும் கூவினார் “உள்ளேன் ஐயா! உள்ளூர்க் கருப்பையா” என்று.

நானும் எத்தனையோ ஆண்டுகள் எத்தனையோ வகுப்புகளில் வருகைப் பதிவு எடுத்துள்ளேன். இந்த ஒரு வருகைப் பதிவிற்கு அவை ஈடாகுமா?

சரி அன்றைய பட்டிமன்ற நிகழ்ச்சிக்கு வருவோம்.

கும்பகர்ணனே என்ற அணியில் பாப்பையா பேசத் தொடங்கினார். “கும்பகர்ணன் செய்ந்நன்றி அறிதலின் வடிவம் என்று திருவள்ளுவரது செய்ந்நன்றி அறிதல் அதிகாரத்தில் உள்ள குறட்பாக்களை எடுத்துக்காட்டி

‘செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது” குறள் 101

ஒருவர் நமக்கு ஓர் உதவியும் செய்யாதபோதும் அவருக்கு நாம் ஓர் உதவி செய்தால் அந்த உதவிக்கு இந்த உலகமும் வானுலகும் கூட ஈடாகாது என்ற குறட்பாவின் கருத்தெல்லைக்கு மேலே போய்க் கும்பகர்ணன் தன்னை ஊட்டி வளர்த்த தனது அண்ணனுக்கு நன்றிக்கடன் செலுத்தினான்.

நீர்க்கோல வாழ்வை முழுதுமாக நம்பி அது என்னால்தனக்குக் கிடைக்குமென்று கருதித் தன் கையாலேயே போர்க்கோலம் பூட்டி அனுப்பிய அண்ணனுக்காக உயிர்கொடாமல் திரும்பி நான் அங்குப் போகேன். அல்லது இராமன் பக்கத்திலும் சேரேன் என்று மறுத்தான் கும்பகர்ணன்” என்று சொல்லி முடித்தார்.

அடுத்து வீடணனே என்ற அணியில் பேச எழுந்த கவிஞர் கதி.சுந்தரம் ஐயா பாப்பையாவின் ஆசிரியர். இதை அந்தக் கூட்டத்தினர் அறிவர். அவர் எழுந்தவுடன் இப்படித் தொடங்கினார்: “நடுவர் அவர்களே! நன்றியறிதலைப் பற்றி எனது மாணவர் தமிழறிஞர் சாலமன் பாப்பையா நன்கு பேசினார். என்னிடம் பாடம் கேட்டதற்கு இப்படி நன்முறையாக நன்றி செலுத்தினார். இதோ இங்கே இருக்கிற நமது புலவர்

கொன்றையாண்டியிடம் படிக்கும் எல்லா மாணவ மாணவியரும் இந்த நல்வழியைப் பின்பற்றுங்கள்" என்று கேலிச் சித்திரம் வரைந்தார். ஒரே கைத்தட்டல்.

கவிஞர் தொடர்ந்தார் " செய்ந்நன்றியறிதல் நல்லதுதான் அது ஓர் அறம் தானே ஆனால் அதைவிடப் பெரியது நடுவுநிலைமை அல்லவா? அதனால் வள்ளுவப் பேராசான் செய்ந்நன்றியறிதல் என்ற அதிகாரத்திற்கு அடுத்து நடுவுநிலைமை என்ற அதிகாரத்தை வைத்துள்ளார். பாப்பையாவை ஒன்று கேட்கிறேன் வீடணன் கும்பகர்ணனைப் புத்திமதி சொல்லி இராமன்பால் அழைத்தானே? அப்போது அவன் என்ன சொல்லி மறுத்தான். நீ ஒருவனாவது அறத்தின் பக்கம் இருக்கிறாயே என்று மகிழ்ந்தேன். நீ அமுதுண்ண இராமனின் பக்கம் உள்ளாய் நாங்கள் எல்லோரும் நஞ்சுண்பதற்காக அண்ணன் இராவணன் பக்கம் இருக்கிறோம். நீ விரைவில் அவன் பக்கம் சேர் என்று விரட்டினான் என்பதை நான் எனது மாணவர் பாப்பையாவிற்கு மிண்டும் இந்த அருப்புக் கோட்டையில் பாடம் நடத்துகிறேன்" என்று சொல்லித் தனது வாதத்தை முடித்தார் கவிஞர் கதி.சுந்தரம் ஐயா. மற்ற பேச்சாளர்களும் திருக்குறளையும் கம்பரது பெரும் காப்பியத்தையும் இணைத்து அருமையாகப் பேசினர். இவ்வாறு இரு அணியினரின் வாதங்களையும் மக்கள் பெரிதும் விரும்பிக் கேட்டு மகிழ்ந்தனர்.

இரு அணியினரின் வழக்குகளையும் சீர்தூக்கிப் பார்த்து திருக்குறளை அடிப்படையாக வைத்து எனது தீர்ப்புரை அமைந்தது. உண்மைதான்

செய்ந்நன்றியறிதலும் ஓர் அறம், நடுவுநிலைமை என்பதும் ஓர் அறம்? அறத்தில் ஒன்றுக்கு ஒன்று சிறிது பெரிது என்பதில்லை. அது அவரவர் வாழ்க்கைச் சூழலை மனப் பண்பினைப் பொறுத்தது. ஒருவனுக்கு அறம் என்று தோன்றுவது மற்றொருவனுக்கு அறம் இல்லை என்று தோன்றும். ஒருவனுக்கு ஒரு நேரம் அறம் என்று தோன்றுவது அவனுக்கே அறம் இல்லை வேறு ஒரு நேரம் தோன்றும். இங்கே வீடணனுக்கு ஒரு குழப்பமும் இல்லை. அண்ணன் தவறு செய்கிறான், நான் அறத்தின் நாயகனாகிய இராமன் பக்கம் போகிறேன் என்று உறுதியாக இருந்தான். ஆனால் கும்பகர்ணனுக்கோ குழப்பம். செய்ந்நன்றியறிதல், நடுவுநிலைமை இரண்டு அறங்களின் ஊடே சிக்கித் தவிக்கிறான். ஆனால் அவனுடைய தம்பி வீடணன் அவனிடம் வந்து "அண்ணா! நீயும் இராமனின் பக்கம் வந்துவிடு, எனக்கு இராமன் அளிப்பதாக வாக்களித்துள்ள இலங்கை அரசை உனக்கு அளித்து உனக்கு நான் ஏவல் செய்து வாழ்வேன்" என்று சொன்னவுடனேயே தெளிவு பிறக்கிறது. ஆக இராமன் பக்கம் சேர்வது அரசுரிமை பெறுவது என்ற பயனைப் பெறுவதற்கு என்று தெளிவாகிறது. அதனால் திருவள்ளுவப் பெருமான் தனது செய்ந்நன்றியறிதல் என்ற அதிகாரத்தில் சொல்வதுபோல

"பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலின் பெரிது" –திருக்குறள் 103.

நான் அரசு என்ற பயன் தூக்கி இராமன் பக்கம் சேர்வதை விட ஒரு பயனும் கைம்மாறும் கருதாமல் எனக்கு உதவிய எனது அண்ணன் இராவணன் பக்கமே இருந்து அவனுக்காக உயிரையும் கொடுப்பேன். "புலையுறு மரணமேனும் எனக்கது தக்கது" என்று சொல்லி நம்முடைய மதிப்பில் இமயம் அளவு உயர்ந்து நிற்கிறான் கும்பகர்ணன். ஆகவே "அரக்கன் தம்பியருள் அறவழி நின்றவன் கும்பகர்ணனே" என்று எனது தீர்ப்பைச் சொல்லி முடித்தேன்.

# “முப்பால் ஒளி” பரப்பிய அப்பாத்துரையார்

பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை அவர்கள் (சூன் 24, 1907 - மே 26, 1989) தமிழ்நாடு கண்ட பேரறிஞர்களுள் ஒருவர். கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய் மொழி என்னும் சிற்றூரில், காசிநாதபப்பிள்ளை-முத்து இலக்குமி அம்மாள் வாழ்விணையருக்கு 24-06-1907 அன்று பிறந்தார். பெற்றோர் சூட்டிய பெயர் “நல்லசிவம்” என்பதாகும். தொடக்கக் கல்வியை ஆரல்வாய் மொழியிலும், பள்ளிக் கல்வியை நாகர்கோவிலிலும், கல்லூரிக் கல்வியை திருவனந்தபுரத்திலும் பயின்றார். ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். தமிழ் ஆங்கிலம் இரண்டிலும் ஒரே ஆண்டில் முதுகலைத் தேர்ச்சி பெற்றார். திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்தில் தனிவழியில் பயின்று தமிழில் முதுகலைப் பட்டதாரியானார். இந்தி மொழியில் ’விசாரத் தேர்வு எழுதி தேர்ச்சியடைந்தார். சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து எல்.டி. பட்டம் பெற்றார்.

“அப்பாத்துரையாருக்கு தமிழ், மலையாளம், வடமொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய ஐந்து மொழிகளிலும் சரளமாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் கூடிய திறமை இருந்தது.” என்று விக்கிப்பீடியா பதிவு செய்துள்ளது. ஆனால் இவர் நாற்பது மொழிகள் எழுதவும் பேசவும் படிக்கவும் அறிந்தவர் என என் தந்தையார் கூறக் கேட்டிருக்கிறேன். இத்துணை மொழிகள் அறிந்தவர் இந்தியாவில்-ஏன் உலகில்-இதுவரை யாரும் இல்லை. ஆயின் பேதைத் தமிழர்கள் இவரது அறிவுத்திறனை அறிந்துகொள்ளும் அறிவும் இன்றிப் போயினர் என்பது வருந்தத்தக்கதே.

`உலக இலக்கியங்கள்` என்ற நூலில் பிரெஞ்சு, சீனம், ருசியா, உருது, பாரசீகம், கன்னடம், தெலுங்கு, செருமனி, வடமொழி, கிரேக்கம் எனப் பத்து மொழிகளின் இலக்கியங்களை ஆராய்ந்து அரிய பல செய்திகளைத் தந்துள்ளார். இந்தப் பத்து மொழிகளிலும் இவர் பெற்றிருந்த கல்விக்கும் புலமைக்கும் இந் நூலே சான்றாகிறது.

நாட்டு வரலாறு, வாழ்க்கை வரலாறு, மொழிபெயர்ப்பு, இலக்கியத் திறனாய்வு, சிறுகதை, நாடகம், பொது அறிவு, அகராதி, கட்டுரை, குழந்தை இலக்கியம் எனப் பல்வேறு துறைகளிலும் பட்டை தீட்டப்பட்ட வைரமாகத் திகழ்ந்தார். அந்தத் துறைகளை அணிசெய்யும்வண்னம் நூற்று இருபது அரிய நூல்களைப் படைத்த ஆழ்ந்தகன்ற இந்த அறிஞருக்கு இணையான பல்துறை அறிஞரைத் தமிழ்நாட்டு வரலாற்றில் இதுவரை கண்டதில்லை.

இவர் நூற்றுக்கணக்கான நூல்களைப் படைத்திருந்தாலும் குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு மற்றும் தென்னாட்டுப் போர்க்களங்கள் ஆகியவை தலையாய சிறப்பு வாய்ந்தனவாகப் போற்றப்படுகின்றன. தமிழும் தமிழரினமுமே உலக மொழிகளுக்கும் மனித இனத்திற்கும் முன்னோடிகள் என்னும் தமது கோட்பாட்டை அறிவியற்பூர்வமாகத் ஆழமான ஆய்வு மூலம் முன்மொழிந்த திறத்தால் குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு அன்று முதல் இன்று வரை புகழ்பெற்று விளங்குகிறது. இவரது இந்த நூலுக்குப் பின்னரே இலெமூரியாக்கண்டம் பற்றிப் பல்வேறு ஆய்வுகள் எழுந்தன. கடல்கொண்ட பூம்புகார் பற்றிய கிரகாம் காங்கோக் ஆய்வு இரண்டாயிரமாவது ஆண்டில் அறிஞர் உலகில் பேசப்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

“தென்னாட்டுப் போர்க்களங்கள்” தமிழ்நாட்டு வரலாற்றில் பல புதிய செய்திகளை வழங்கியுள்ளது.

“மேலை நாகரிகத்தை அயல்நாகரிகமாகவும், வடதிசை அடிமை இருட்கால நாகரிகத்தை அக உரிமை நாகரிகமாகவும் கொள்ளும் வடதிசையின் இன்றைய போக்கு தமிழரை மட்டுமன்றி உலகையும் இருளை நோகியே இட்டுச் சென்றுவருகிறது.”(முகப்புரை.பக்கம்.IV )

“தென்னாட்டுப் போர்க்களங்கள் என்ற இந்தச் சிற்றேடு மூவகைக் குறிக்கோள்களுடன் எழுதப்பட்டுள்ளது.

1) “தமிழகத்தை மையமாகக் கொண்டு அதன் அரசியல் விரிவாகிய தென்னாட்டிலும், அதனினும் விரிந்த பண்பு விரிவாகிய தமிழுலகம், அதாவது இந்தியாவிலும் தென்கிழக்காசியாவிலும் கண்ணோட்டம் செலுத்தித் தமிழகத் தேசீய வாழ்வின்உடலும் உயிர்மையமும் காண முயன்றுள்ளது.”

2) “இரண்டாவதாக, போர்கள், வெளிநாட்டுத் தொடர்புகள்

“போர்க்கள வரலாறு தேசிய வரலாற்றின் எலும்புமையமாக, கணுமையங்களாக, திரும்புகட்டங்களாகவே விளக்கப்பட்டுள்ளன.”

3) நிகழ்ச்சி கடந்து அவற்றின் காரண காரியங்களை ஆராய்வதும், அவற்றை நாடு கடந்து உலகில் கண்டு மதிப்பிட முயல்வதும்….”

என்னும் தமது முன்மொழிவுகளால், தமது நூலின் நோக்கத்தை மட்டுமின்றி, தமிழ்நாட்டு வரலாறு எழுதுதற்குரிய நெறிமுறைகளையும் அப்பாத்துரையார் ஆய்வியற்பாங்குடன் எடுத்துரைக்கும் பாங்கு அனைத்து வரலாற்றறிஞர்களின் கண்களைத்

திறந்திருக்கவேண்டும். ஆயின் மேலைநாட்டு அணுகுமுறைகளின் மயக்கத்தில் திளைப்போர் இன்னும் விழிப்புணர்வு பெறவில்லையே. இந் நூலுள் அடுக்கி விரிக்கப்படும் போர்களின் பட்டியலைப் பாருங்கள். (இயல் தலைப்பு, பக்கங்கள், போர்கள்)

அகல் உலகத் தொடர்பு: (பக்கம்.23-34)

தமிழர் முதல் வானகப் போர்

வடதிசைத் தொடர்புகள்: (பக்கங்கள் 35-48)

வாட்டாற்றுப் போர், செல்லூர்ப் போர், செருப்பாழிப் போர், காரவேலன் படையெடுப்பும் தோல்வியும், முதல் வல்லத்துப் போர், இமயப் படையெடுப்பு

சங்ககாலப் போர்கள்-I-( பக்கங்கள் 49-67)

வெண்ணிப் போர் I, வெண்ணிப் போர் II, வெண்ணிப் போர் III, பண்டைப் பெருஞ் சோழப் போர்கள்

சங்ககாலப் போர்கள்-II— (பக்கங்கள் 68-87)

கடம்பின் பெருவாயில் போர், நேரிவாயில் போர், கங்கைப் போர் I , கங்கைப் போர்-II,

சங்ககாலப் போர்கள்-III-( பக்கங்கள் 88-115)

நலங்கிள்ளி-நெடுங்கிள்ளி போராட்டங்கள், காரியாற்றுப் போர்I, கூடற்பறந்தலை III, தலையானங்கானத்துப் போர், திருக்கோவலூர்ப் போர் I, காரியாற்றுப் போர் II, குளமுற்றத்துப் போர், திருக்கோவலூர்ப் போர்-II, கழுமலப் போர்

பேரரசுப் போட்டி: (பக்கங்கள் 116-167)

புள்ளலூர்ப் போர், சிம்பிகைப் போர், வடதிசைப் பெரும்போர், கோயத்தார், தண்டக்கல், முனையத்தூர்ப் போர்கள், நெல்வேலிப் போர், பெருவளநல்லூர்ப் போர், மருதூர், செங்கோடு, புதாங்கோட்டுப் போர்கள், மங்களாபிரம் போர், பெரியலூர், புகலியூர்ப் போர்கள், வெண்பைப் போர், பெண்ணாகடப் போர், விழிஞப் போர்- I & II, கோட்டாறு, சேவூர், பூலந்தை, நாரையாறு, கடையல் போர்க்களங்கள்,விளந்தைப் போர்,தெள்ளாற்றுப் போர் I,சிங்களப் போர்,குன்னூர்ப் போர்,குடமூக்குப் போர்,அரிசிலாற்றுப் போர்,இடவைப் போர்,திருப்புறம்பியம் போர்,கரகிரிப் போர்

சோழப் பெரும்பேரரசு (168-274)

வெள்ளூர்ப் போர்,முற்காட்டுப் போர்,வல்லாளப் போர்,தக்கோலப் போர்,தும்பைப்பதிப் போர், சேவூர்ப்போர்I&II,காந்தளூர்ப் போர், பணசோகேப் போர்,கலையூர் போர்,தோனூர் போர்,முதற்கலிங்கப் போர்,ஈழப் பெரும்

போர்,பளகாம்வேப் போர்,முசங்கிப் போர்,வடதிசைப் போர் I, II & III,சக்கரக் கோட்டப் போர்,ஆதிநகர்ப் போர்,தண்டபுத்திப் போர்,கன்னோசிப் போர்,சீர்விசயப் போர்,அனுராதபுரம் போர்,கம்பிலிப் போர்,பூண்டூர்ப் போர்,கொப்பத்துப் பெரும்போர்,முடக்காற்றுப் போர்,கூடல் சங்கமப் போர்,கிருஷ்ணையாற்றுப் போர்,ஐந்தாவது & ஆறாவது விசயவாடாப் போர்,வயிராகரப் போர்,துங்கபத்திரைச் செங்களப் போர்கள், செம்பொன்மாரிப் போர்,பொலன்னறுவாப் போர்,தும்மேப் போர்,திருவேடகப் போர்,நெட்டூர்ப் போர்,கழிக்கோட்டைப் போர்கள்,யெல்பர்க்காப் போர்கள், உறத்திப் போர்பெரம்பலூர்ப் போர்,மகேந்திரமங்கலம் போர்,கண்ணனூர்ப் போர்,முடுகூர்ப் போர்,காரிக் களப் போர்,தலைச்சிக் குளக்கரைப் போர்

வீழ்ச்சியும் மீட்சியும் (பக்கங்கள் 275-445)

வீரதவளப் பட்டினப் போர்,திருவண்ணாமலைப் போர்,சமயவரம் போர், கௌதல் போர், துங்கபத்திரையாற்றுப் போர்,தபதி யாற்றுப் போர்,அறந்தைப் போர்கள்,சங்கரநயினார்கோயில் போர்,திருக்குற்றாலப் போர், முதலைக்குளப் போர், இரேய்ச்சூர்ப் போர்,கந்தார்ப் போர், கொயில்மொண்டாப் போர், மலையடிவாரப் போர்,கயத்தாற்றுப் போர், தோவாளைக் கணவாய்ப் போர், ஜம்கெட் போர்,தலைக்கோட்டைப் போர், புத்தளம் போர்,முன்னலிப் போர்,செங்கற்பட்டுப் போர்,திருச்சிராப்பள்ளிப் போர்,மதுரைப் போர்,செஞ்சிப் போர்தோப்பூர்ப் போர்,பாளையங்கோட்டைப் போர்,உதயகிரிப் போர்,வேலூர்ப் போர்,சேதுநாட்டுப் போர்,மைசூர்ப் போர், ஈரோட்டுப் போர்,சக்கரப்பட்டணம் போர், ஆசனாப் போர்,வாலிகண்டபுரம் போர், வந்தவாசிப் போர்,தேசூர்ப் போர்மாரணிப் போர்,கதலிமலைப் போர், உறையூர் போர்,அம்மையநாயக்கனூர் போர்,தாமல் செருவுப் போர், கொடுத்தலம் போர், ஆம்பூர்ப் போர்,திருவாதிப் போர்,புத்தனந்தல் போர், காவேரிப்பாக்கம் போர்,பாகூர்ப் போர்

தேசியவாழ்வும் புதுமலர்ச்சியும் (பக்கங்கள் 446-499)

தண்டுல் காப் போர், காக்கன்கரைப் போர், செங்கம் கணவாய்ப் போர், வாணியம்பாடிப் போர், மூலபாகல் போர், சிங்குர்லிப் போர், சாவனூர்ப் போர், இராரவிப் போர், பேரம்பாக்கம் போர், சிதம்பரம் போர், புத்தந்துறைப் போர், சோளிங்கர்ப் போர், அன்னக்குடிப் போர், திரிகலூர்ப் போர், ஹோபிகர்ப் போர், நெடுங்கல் போர், பனியானிப் போர், பெரியபட்டணம் போர், அரிகாராப் போர், கர்ட்லாப் போர், சித்தேசுவரப் போர், மழவள்ளிப் போர், பூலித்தேவர் போராட்டம், பாஞ்சாலங்குறிச்சிப் புரட்சி, மருது காவியம்.

ஈடும் இணையுமற்ற இந்த நூலின் சிறப்பைச் சுட்டவே இதன் நுவல்பொருளைச் சுருக்கி வழங்கியுள்ளேன்.

“அப்பாத்துரையாரின், ‘தென்னாட்டுப் போர்க்களங்கள், என்ற வரலாற்று நூல், போர்க்களங்களின் பட்டியலன்று, போர்க்களங்களின், போர்களின் பின்புலங்கள், போர்ச் செயல்கள், போரின் விளைவுகள், போர்களின் வழியாக புலப்படும் அரசியல் நெறிகள் ஆகியவற்றையெல்லாம் ஆராயும் நூலாக அமைந்துள்ளது” எனக் குறிப்பிட்டு, என் தந்தையார் பேராசிரியர் சி. இலக்குவனார், இந் நூலை மாணவர்களும் ஆய்வாளர்களும் சிறப்புறப் பயன்கொள்ளவேண்டும் என வலியுறுத்துவதைக் கண்டுள்ளேன்.

499 பக்கங்களில் இத்துணைப் போர்களையும் விவரிக்கப் பன்மொழிப்புலவர் எத்துணை ஆயிரம் பக்கங்கள் படித்திருக்கவேண்டும்? இந்தத் தரவுகளைத் திரட்ட எத்துணை நூல்களைக் கற்றிருக்கவேண்டும்? என வியப்புடன் பேரறிஞர் அண்ணா பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

“இந்நூல் என்னை மிகவும் கவர்ந்த நூலாகும். அந்த நூலின் ஒரே ஓர் ஏட்டை எழுத, அவர் எத்தனை ஆயிரம் ஏடுகளைத் தேடிப் பார்த்திருக்க வேண்டும். எத்தனை ஆயிரம் கவிதைகள், இலக்கியங்கள் திரட்டிப் பார்த்திருக்க வேண்டும் என்பதை எண்ணி வியந்தேன்” என்று பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பெற்ற இந் நூல் நூற்றுக்கணக்கான பதிப்புகளைக் கண்டு அப்பாத்துரையாருக்கு அளவற்ற வருமானத்தை அள்ளிக் கொடுத்திருக்கவேண்டாமா? இந் நூலை ஒரு முன்வரைவாகக் கொண்டு வரலாற்றுப் பேராசிரியர்கள் விரிவான தமிழ்நாட்டு வரலாற்றை வெளிக்கொணர்ந்திருக்க வேண்டாமா? சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைக் கல்விமுறையையே பின்பற்றி மாணவர் திறனையெல்லாம் மழுங்கடிக்கச் செய்யும் கல்வியாளர்களும் பாடத்திட்டமும் நீடிக்கும்வரை இவற்றையெல்லாம் எதிர்பார்க்கமுடியாது.

அப்பாத்துரையார் பேச வாய்திறந்தால் அருவியெனத் தங்குதடையின்றிக் கருத்துவெள்ளம் பொங்கிப் பெருகிவரும். ஒருமுறை காரைக்குடியில் ‘தமிழ்’ என்னும் தலைப்பில் உரையாற்றத் தொடங்கியவர் தொடர்ந்து பதினைந்து நாள்களுக்கு அந்தப் பொழிவை நிகழ்த்தியுள்ளார். பொழிவை ஏற்பாடு செய்தவர்கள் அவரது கருத்துவெள்ளத்தில் திளைக்கக் கருதிக் கூட்டத்தைப் பதினைந்து நாள்கள் தொடர்ந்திடச் செய்தமை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. அந்தக் கூட்டம் அறிஞர்கள் நிறைந்த கூட்டம். பதினைந்து நாள்கள் தொடர்ந்து அந்த உரையைச் செவிமடுத்தவர்களில் பாவேந்தர்

பாரதிதாசனும் ஒருவர். இந்தச் செய்தியை அப்பாத்துரையாரின் “வருங்காலத் தமிழகம்” என்னும் நூலின் மதிப்புரையில் அவரே குறிப்பிட்டுள்ளார்.

“வியப்பு என்னையெனில் காரைக்குடிப் பாங்கில் அறிஞர் நிரம்பிய கூட்டத்தில் தமிழ் என்பது பற்றிப் பேசத் தொடங்கி ஏறக்குறைய பதினைந்து நாட்களின் பின் முடித்தார்கள். கேட்டு வியந்தவர்களில் நானும் ஒருவன்.”(வருங்காலத் தமிழகம்,பக்கம்.4,மதிப்புரை)

புத்தம்புதிய விளக்கங்களுடன் ஒப்பிலக்கிய நோக்கில் விரிவும் செறிவும் கொண்டமைந்த உரையால் வள்ளுவச் சுடரை நம் உள்ளத்தில் ஒளிரச் செய்யும் ஆற்றல் அப்பாத்துரையார் ஒருவருக்கே உரியது. திருக்குறள் உரைக்கெனவே `முப்பால் ஒளி` என்ற இதழை ஆறு ஆண்டுகள் தொடர்ந்து வெளியிட்டார்.

அவரது "திருக்குறள் மணி விளக்க உரை" என்ற தலைப்பில் அமைந்த நூல், ஆறு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது. மேலும், கவியரசு கண்ணதாசன் நடத்திய "தென்றல்" வார இதழிலும், "அன்னை அருங்குறள்" என்ற தலைப்பில் புதிய குறள்பா படைத்துள்ளார்.

அவரது திருக்குறள் மணிவிளக்க உரையில், உலகின் பலமொழிகளில் உள்ள அறிவார்ந்த அற நூல்களோடு ஒப்பிட்டு திருக்குறளைக் காணும் காட்சி மிகப் புதியது; பொருள்செறிவு மிக்கது.

“தமிழில் உலகப்பொதுமறையாம் திருக்குறளுக்கு முழுதளவான விருத்தியுரை இல்லாக் குறையையும், இருபதாம் நூற்றாண்டுக்குரிய அறிவுலகப் புத்தாராய்ச்சியுரை இல்லாக் குறையையும் நீக்கவல்ல பேருரை இத் திருக்குறள் மணிவிளக்கவுரை.” என இந் நூலின் முதற்பகுதிக்கான பதிப்புரையில் குறிப்பிட்டுள்ளமை நூலின் நோக்கத்தை விளக்குகிறது.

திருக்குறள் கி.மு.1500 ஆண்டுக்குரியது எனவும் அதுவே ஆசியாவின் ஆதிநூல் எனவும் அறுதியிடும் இந் நூல் தமிழ்நாட்டில் பேராசிரியர்களால் கூடப் படிக்கப்படவில்லை என்பதும் ஆய்வாளர்களால் ஆய்வுப் பொருளாக்கப்படவில்லை என்னும் கொடுமைகளை எண்ணி நாணுவதா?சீறுவதா?

அகராதிக்கலை முன்னோடிகளுள் ஒருவராக அப்பாத்துரையார் போற்றப்படவேண்டியவர்.சைவசித்தாந்தப் பதிப்புக்கழகத்தின் வாயிலாக இவர் வெளியிட்ட கையடக்க ஆங்கிலம்-தமிழ் அகராதி பல்வேறு துறைச் சொல்லகராதிகளுக்குக் கைகாட்டியாக இன்றும் விளங்கிவருகிறது.வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம் - தமிழ் அகராதித் தயாரிப்பில் 1959 முதல் 1965 வரை அதன் ஆசிரியராகச் செயல்பட்டார். பல பதிப்புகளைக் கண்ட இந்த அகராதி சொற்களஞ்சியம் எனப் பெயரிடப்ப்ட்டுள்ளது பொருத்தமே. இந்தக் களஞ்சியத்தில் நிறைந்துள்ள சொல்மணிகள் அனைத்தும் பன்மொழிப்புலவர் அப்பாத்துரையாரின் உழைப்பால் விளைந்த விளைச்சலே. அவர் உருவாக்கி வழங்கியுள்ள சொற்களஞ்சியமே ஆட்சித்துறைச் சொல்லகராதியையும் கலைச்சொல்லகராதிகள் பலவற்றையும் உருவாக்க மூலமுதலாகத் திகழ்ந்து பயன்விளைத்தது. பல்லாயிரக் கணக்கான சொற்களை வாரிவழங்கிய அப்பாத்துரையாரின் பங்களிப்பை நன்றி மறந்த தமிழர் வாயாரப் பாராட்டியதுண்டா?

நூற்றுக்கணக்கான அறிஞர்கள் உழைத்து இப்போது உருவாக்கிவரும் சொற்கள் நூற்றுக்கணக்கானவையே. ஆயின் அப்பாத்துரையார் தனியொருவராக உருவாக்கியளித்துள்ள பல்லாயிரக் கணக்கான சொற்கள் கொண்ட

சொற்களஞ்சியம் மிகப் பெரும் அகராதியாகத் தமிழுக்கு வாய்த்த அருங்கொடையாக விளங்கிவருகிறது.

விரிந்த கல்வியும் நிறைந்த புலமையும் கொண்டு வாழ்வெல்லாம் தமிழுக்கெனவே வாழ்ந்த அப்பாத்துரையாருக்குத் தகுதிக்கேற்ற பணி கிடைத்ததாகக் கூற முடியாது. அங்கும் இங்குமாகப் பல பணிகளில் பந்தாடப்பட்டார் என்றே வருத்தத்துடன் கூறவேண்டியுள்ளது.

திருநெல்வேலி, 'மதுரைதிரவியம் தாயுமானவர் இந்துக் கல்லூரி 'யில் 1937 முதல் 1939 முடிய இந்தி ஆசிரியராகப் பணிபுரிந்தார். காரைக்குடி, 'அமராவதிப் புதூர்'-குருகுலப் பள்ளியில் அப்பாத்துரையார் தலைமையாசிரியராகப் பணியாற்றிய போது மாணவராயிருந்த கவிஞர் கண்ணதாசன் இவரிடம் பயின்றார்.

திருநெல்வேலியில் இந்தி ஆசிரியராகப் பணிபுரிந்தபோது தமிழகத்தில் இந்திமொழி கட்டாயப் பாடமாகத் திணிக்கப்பட்டதனை எதிர்த்து 1938-39 ஆம் ஆண்டுகளில் நாடெங்கும் நடந்த இந்தி எதிர்ப்புப் போரில் பங்கு கொண்டார். இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்றதால் பணியிழந்தார்.

மத்திய அரசின் செய்தித் தொடர்புத் துறையில் 1947 முதல் 1949 வரை பணியாற்றினார். அப்போது, "இந்தியாவின் மொழிச்சிக்கல்" என்ற ஆங்கில நூலை எழுதியதால் தனது வேலையை இழந்தார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சில காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தார். சென்னைப் பல்கலைக்கழக ஆங்கிலம்-தமிழ் அகராதித் தயாரிப்பில் 1959 முதல் 1965 முடிய அதன் ஆசிரியராகப் பணி செய்தார். மேலும், தமிழக வரலாற்றுக்குழு உறுப்பினராக 1975 முதல் 1979 வரை இருந்துள்ளார்.

அன்று" ஐயா" என்னும் சொல் தந்தை பெரியாரைக் குறிக்கவே தமிழ்கூறுநல்லுலகில் பயன்படுத்தப்பட்டது. அண்ணா என அறிஞர் அண்ணா அழைக்கப்பெற்றது போன்றே "அப்பா" என்னும் சொல் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையாரைக் குறிக்கவே பயன்படுத்தப் பெற்றது. அறிவுமுதிர்ச்சியும் அருள்கனிந்த முகமும் அவரை 'அப்பா'என்றே அழைத்திட அனைவரையும் உந்தியதில் வியப்பென்ன? அவர் இந்திஎதிர்ப்பு மறியலில் கலந்துகொண்டபோது காவலர் எறிந்த குண்டாந்தடி அவர் நெற்றியை உடைத்துக் குருதி வழியச் செய்த செய்தியை என் தந்தையார் பதைப்புடன் நினைவுகூர்வார். மென்மையும் மேன்மையும் வாய்ந்த அறிஞரைத் தடியால் புடைத்தவன் இளங்கோ சுட்டிய 'கல்லாக் களிமகனினும்'கயவன் என இகழ்வார்.

கண்மூடித்தனமாகத் தடி ஓச்சிய அந்தத் தடியன்,அனைவரும் போற்றிய அப்பாவின் அருள்முகத்தைப் பார்த்திருந்தால், தடியெறிந்திருக்க மாட்டான்.

தம் வாழ்வும் ஆய்வும் கொண்டு தமிழ்மறுமலர்ச்சிக்கு உழைத்த அந்த மாபெரும் அறிஞருக்குத் தமிழ்நாடு செய்ததென்ன?1989-ஆம் ஆண்டு தமது எண்பத்தேழாவது அகவையில் அவர் மறைந்தார் (மே 26).

1967ஆம் ஆண்டுக்குப் பின்னர் திராவிட இயக்கங்களின் ஆட்சி இருபத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து இருந்ததும் உண்மை. இந்தப் பேரறிஞர்க்கு அவரது தமிழ்த்தொண்டுக்கு ஏற்ப எவ்வகைச் சிறப்பும் வழங்கப்பெறவில்லை என்பதும்

உண்மை.திரைக்கலைஞர்களைப் போற்றிக் கொண்டாடும் நாட்டில் தமிழறிஞர்களுக்கு மதிப்பு ஏது?

காலத்தால் அழியாத அவரது ஆய்வுநூல்களைக் கருவூலமாகப் போற்றுவதுடன் அவர் ஆய்வுநெறியில் தொடர்ந்து உழைத்துத் தமிழின் மாண்பை உலகம் போற்றிட ஆவன செய்வதே அவருக்குச் செலுத்தும் நன்றிக்கடனாக விளங்கும்.

அவரது நூல்கள் பட்டியல்:
குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு
தென்னாட்டுப் போர்க்களங்கள்
ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் (மொழிபெயர்ப்பு)
கிருஷ்ணதேவ ராயர்
வெற்றித் திருநகர்

காற்றும் மழையும் (நாடகம்) (சிலம்பு நாடக மன்றத்தால் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் அண்ணாதுரை தலைமையில் 22-4-56ஆம் நாள் அரங்கேற்றப்பட்டது)

சரித்திரம் பேசுகிறது
மருதூர் மாணிக்கம்
தென்னாடு

கிருட்டிண தேவராயர், நேதாசி சுபாசு சந்திரபோசு, டேவிட் லிவிங்சுடன், அரியநாத முதலியார், கலையுலக மன்னன் இரவிவர்மா, வின்சுடன் சர்ச்சில், அறிவியல் முனைவர் ஐன்ஸ்டீன், அறிவுலக மேதை பெர்னாட்சா, கன்னட நாட்டின் போர்வாள் ஐதர் அலி ஆகிய வரலாற்று நூல்களுடன் ஆங்கிலப் புலவர் வரலாறு, சங்க காலப் புலவர் வரலாறு, அறிவியலாளர் பெஞ்சமின் பிராங்கிளின் உள்பட பலரின் வாழ்க்கை வரலாறுகளை அரிய பல நூல்களாகப் படைத்துள்ளார்.

மேலும் சங்க காலப் புலவர்களில் பிசிராந்தையார், கோவூர்கிழார், ஔவையார், பெருந்தலைச் சாத்தனார் முதலிய நால்வர் பற்றியும் எழுதியுள்ளார் அப்பாதுரையார். அலெக்ஸாண்டர், சந்திரகுப்தர், சாணக்கியர் ஆகிய மூவரைப் பற்றி ஏ.எசு.பி. ஐயர் எழுதிய நூலை மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இளைஞர்கள் பயிலும் பாடநூல்களுக்காகவே, அருந்திறலாளர்கள் பலரின் வாழ்க்கை வரலாறுகளை எழுதிக் குவித்துள்ளார்.

எந்தப் பல்கலைக்கழகமும் செய்திராத அரும்பணிகள் பலவற்றைத் தமது நூல்வெளியீடு, ஆய்வுப்பணி, மொழிபெயர்ப்புப் பணி, சொல்லாக்கப்பணி ஆகியவற்றின் மூலம் ஆற்றியுள்ள பேரறிஞர் கா. அப்பாத்துரையார் பற்றிச் சுருங்கச் சொன்னாலே அஃது விரிந்த நூலாகிவிடும். அவரைப் பற்றிய பாவேந்தர் பாரதிதாசனாரின் பாடலைக் குறிப்பிட்டு இக் கட்டுரையை நிறைவுசெய்ய விரும்புகிறேன்.

“எப்பாத் துறைக்கும் இவனோர் பழம் புலவன்
அப்பாத் துரையறிஞன் ஆழ்ந்தகன்ற முப்பால்பா
நூலறிவு நூறு புலவர்கள் சேரினியன்
காலறிவு காணார் கனிந்து”